வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 11.04.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 102 பக்கங்கள் : 12

### பட்டலந்த ஆணைக்குழு விவகாரம்

# சர்வதேச ஆதரவை பெற்றேனும் ரணில் மீது நடவடிக்கை உறுதி!

## சபையில் அறிவித்தார் அமைச்சர் பிமல்

கொழும்பு, ஏப்ரல் 11

**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பொறுப்பானவர்களுக்கு எதிராக சர்வதேச ஆதரவைப் பெற்றேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான முதல் நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அல்ஜசீரா நேர்காணலின் பின்னரே பட்டலந்த விடயம் பேசும்பொருளாக மாறியதாக கூறுகின்றனர்.

அப்படி ஒன்றும் இல்லை எங்களுக்கு அரசியல் முகாமைத்துவம் உள்ளது. ஊழல்வாதிகளிடம் இருந்து நாட்டை காப்பாற்றவே எமது சகோதர, சகோதரிகள் உயிர் தியாகம் செய்தனர்.

இந்த நாட்டை மீட்கும் நோக்கமே இருந்தது.



சாதாரண பொது மக்களுக்கு நீதியை நிலைநாட்டக் கூடிய நாடாக எமது நாட்டை மாற்றவே முயற்சித்தோம்.

கடந்த 35 ஆண்டுகளாக 11

## மேய்ச்சல்தரை பிரச்னைக்கும் விரைவில் தீர்வு காணப்படும்!
### திலகநாதன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப். 11

மேய்ச்சல் தரை பிரச்னைக்கும் விரைவில் தீர்வு காணப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வனவள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்துடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயிகள் தொடர்பாக எமது அரசாங்கம் கவனம் செலுத்தி அவர்களுக்கு சாதகமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதேபோல் கால்நடை 11

## பட்டலந்த போன்றே குற்றச்செயல்கள் போரின் இறுதியிலும் நிகழ்ந்துள்ளன
### அவை குறித்து ஏன் நடவடிக்கை இல்லை என்கிறார் சத்தியலிங்கம்

கொழும்பு, ஏப். 11

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட காலக்கட்டத்திலேயே அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை 11

## பட்டலந்த வதைமுகாமின் பின்னணியில் இருந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்!
### சபையில் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஏப். 11

பட்டலந்த வதை முகாமின் பின்னணியில் இருந்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தினார்.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நல்ல வழியில் தாம் அரசியலை முன்னெடுத்து



வந்த வேளை 1983ஆம் ஆண்டு தமது கட்சி தடை செய்யப்பட்டது 11

## ரணில் மனிதப் படுகொலையாளி!
### பட்டலந்த சித்திரவதைக்கு பொறுப்பு கூறவேண்டும் என்கிறது அநுர அரசு

கொழும்பு, ஏப். 11

பட்டலந்த சித்திரவதை முகாமுக்கும், படுகொலைகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்புண்டு. ஆகவே அவர் பொறுப்புக்கூற வேண்டும்.

வெண்மை நிற ஆடையணிந்து கொண்டு மனித படுகொலையாளியாகவே அவர் செயல்பட்டுள்ளார். வரலாற்றில் நாங்கள் அரசியல் செய்ததால் எமது சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். உயிரிழந்தவர்களுக்கு நாங்கள் நீதியை பெற்றுக் கொடுப்போம். உண்மையான குற்றவாளிக்கு சட்டத்தின் ஊடாக 11

## சர்வகட்சி கூட்டம் நேற்று வெற்றிகரமாக நிறைவு



கொழும்பு, ஏப். 11

அமெரிக்காவின் புதிய பரஸ்பர வரி விதிப்பு குறித்து நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் அதற்கு பதிலளிக்கும் வகையில் எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதியைச் சந்தித்து 11

## திட்டமிட்டபடி தேர்தல்!

கொழும்பு, ஏப். 11

250 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திட்டமிட்டபடி மே 6ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

நீதிமன்றத்தால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விசாரணைக்குப் பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## அச்சுவேலி கூட்டுறவு சங்க கட்டடமும் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலய கட்டடம் மற்றும் அதனை சூழவிருந்த சுமார் 08 பரப்பு காணியும் நேற்று இராணுவத்தினரால் விடுக்கப்பட்டுள்ளது. 11

### 34 வருடங்களுக்கு பின்னர்
## பலாலி- வயாவிளான் வீதி கட்டுப்பாடுகளுடன் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

வசாவிளான் - பலாலி வீதி நேற்று காலை முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், பலத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 34 வருடங்களாக மூடப்பட்டிருந்த குறித்த வசாவிளான் தொடக்கம் பலாலி கடற்கரை சந்தி வரையிலான பாதை நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு நேற்று திறக்கப்பட்டுள்ளது. 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஆட்சிக்காக நாம் ஒன்றிணைவோம்

## சஜித் பிரேமதாஸ அழைப்பு



கொழும்பு, ஏப். 11

**நல்ல வாழ்க்கை, வீடு மற்றும் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஆரோக்கியமான தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் தலைமுறையை உருவாக்கும் மாநகர சபையை உருவாக்குவதற்கு ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு விடுத்தார்.**

கொழும்பு மாவட்டத்தை மக்களுக்கு சௌபாக்கியமும் அபிவிருத்தியும் நிறைந்த நகரமாக மாற்றுவது ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். வாழ்வாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக வலுவான தலைமுறை உருவாக்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மத்திய கொழும்பு ஜிந்துபிட்டியவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தகவல் தொழில்நுட்பத்திலும், டிஜிற்றல் வசதிகளிலும் புரட்சியை ஏற்படுத்தி, மக்களின் பிரச்னைகளை தீர்க்கவும், உட்கட்டமைப்பு வசதிகளை காலத்துக்கு ஏற்றாற் போல் மேம்படுத்தவும், மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நல்ல வீடு மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுத் தரவும் புதிய வழிமுறைகளை நாம் பயன்படுத்துவோம்.

அந்தப் பொறுப்பை நேர்மையாகவும், தூய்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுப்போம். மேலும், மக்களின் பிரச்னைகளை செவிமடுக்கும் வகையில் மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிப்புள்ள மாநகர சபையை உருவாக்குவோம். பிரச்னைகளுக்கு பதில் வழங்கும் மாநகர சபையாக கொழும்பு மாநகர சபையை நாம் மாற்றுவோம். இதுவே மக்களின் எதிர்பார்ப்பு-என்றார். (அ)

# முதிரைக் குற்றிகளுடன் சென்ற வாகனம் விபத்து!

## சாரதி உட்பட இருவர் தப்பிஓட்டம்

வவுனியா, ஏப். 11

சட்டவிரோதமாக கடத்திச் செல்லப்பட்ட ஒரு தொகை முதிரைக்குற்றிகள் வவுனியா பூவரசங்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.


நேற்று அதிகாலை வவுனியா - மன்னார் வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பூவரசங்குளம் பொலிஸார் வாகனம் ஒன்றை வழிமறித்துள்ளனர்.

இதன்போது குறித்த வாகனம் பொலிஸாரின் சைகையை மீறி நிறுத்தாமல் சென்றுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் அந்த வாகனத்தை துரத்திச் சென்றுள்ளனர். அதிவேகமாக சென்ற வாகனம் இராசேந்திரங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகியது.

அதனைச் செலுத்திய சாரதி உட்பட இருவர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார் அதிலிருந்த ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரைமரக்குற்றிகளை மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

தப்பிச் சென்றவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)



# மியன்மாரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி



கொழும்பு, ஏப். 11

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு நிவாரணமாக இலங்கை அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

1-12.PDF.11

அதற்கான காசோலை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இலங்கைக்கான மியன்மார் தூதுவர் மார்லர் தான் ஹடாயிக்கிடம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு நிதி உதவி வழங்கியதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உள்ளிட்ட அரசாங்கத்திற்கு இலங்கைக்கான மியன்மார் தூதுவர் நன்றி தெரிவித்தார்.

அதேபோல் நெருக்கடியான நேரத்தில் நிவாரணக் குழு மற்றும் சுகாதார பணிக்குழுவை அனுப்பி வைத்தமைக்காகவும் நன்றி தெரிவித்த தூதுவர், இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான நீண்டகால மத மற்றும் கலாசார நட்புறவு இதன் காரணமாக மேலும் வலுவடையும் என்றும் கூறினார்.

மேலும் நிலநடுக்கத்தின் பின்னர் மியன்மாரின் தற்போதைய நிலைமை குறித்தும் ஜனாதிபதியின் செயலாளருக்கு தூதுவர் விளக்கமளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சுற்றுலாவுக்கு செல்வதாக தெரிவித்து போதைப்பொருள் கடத்திய இருவர் கைது



கொழும்பு, ஏப். 11

நாட்டின் பல பகுதிகளுக்கு, குடும்ப உறுப்பினர்களுடன் சுற்றுலா செல்வதாக தெரிவித்து, ஐஸ் ரக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கினிகத்ஹேன - கடவல பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இதன்போது குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 28 ஆயிரத்து 400 மில்லிகிராம் ஐஸ் ரகப் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மாத்தறை பகுதியைச் சேர்ந்த 31 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் வட்டவலை, ஹற்றன், கொட்டகலை, தலவாக்கலை, நுவரெலியா, வெலிமடை, அப்புத்தளை மற்றும் பண்டாரவளை ஆகிய பகுதிகளுக்கு அவர்களின் மனைவி மற்றும் குழந்தைகளுடன் சுற்றுலா செல்வதாகக் கூறி போதைப்பொருள் கடத்தலை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் வங்கி அட்டையை பயன்படுத்திக் கட்டணம் செலுத்தும் முறைமை



கொழும்பு, ஏப். 11

அதிவேக நெடுஞ்சாலைகளில் வங்கி அட்டைகளை பயன்படுத்தி பணம் செலுத்தும் ஒரு முன்னோடி திட்டம் இந்த வாரம் தொடங்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் முன்னோடித் திட்டம் கொட்டாவ மற்றும் கடவத்தை நெடுஞ்சாலை இடமாற்றங்களில் செயல்படுத்தப்படும் என்று அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இடமாற்றங்களை பயன்படுத்தும் பயணிகள் டெபிட் மற்றும் கிரெடிட் அட்டைகள் மூலமாகவும், கியூ குறியீடுகளை ஸ்கானிங் மூலமாகவும் பணம் செலுத்த முடியும்.

சோதனை கட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, மே மாதத்திற்குள் இலங்கையின் அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் வங்கி அட்டைகளை அறிமுகப்படுத்த அமைச்சு இலக்கு வைத்துள்ளது. (அ)

# 15ஆம் திகதி அரச விடுமுறை இல்லை

கொழும்பு, ஏப். 11

ஏப்ரல் 15 ஆம் திகதி அரச விடுமுறை தினமாக அறிவிப்பது குறித்து இன்னும் எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளவில்லை என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி 18ஆம் திகதியும் பெரிய வெள்ளி தினம் என்பதால், குறிப்பிட்ட வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே வேலை நாட்கள் காணப்படுவதால், 15ஆம் திகதி குறித்து இன்னும் தீர்மானமொன்றுக்கு வரவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# பஸ் ஆசன முன்பதிவு நிறுத்தம்

கொழும்பு, ஏப். 11

சித்திரை புத்தாண்டு காலப் பகுதியில் பயணிகளுக்காக ஆசனங்களை முன்பதிவு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி வரை முன்பதிவு நடவடிக்கை இடைநிறுத்தப்படவுள்ளது.

பஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதனைத்தவிர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கத்தில் பஸ்கள் தொடர்ச்சியாக பயணிக்க வேண்டியதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சாரதியொருவரின் கடமை நேரம் 14 மணித்தியாலங்களுக்கு மேற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மற்றுமொரு சாரதியை பணிக்கமர்த்த வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து பஸ்களை விசேட சுற்றுலாப் பயணங்களுக்கு ஈடுபடுத்துவதும் புத்தாண்டு காலப்பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.04.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அது எப்படி முடியும்?

"வடக்கு, கிழக்கில் சீனா காலூன்ற நாங்கள் அனுமதிக்கமாட்டோம்", என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் சீன அடிவருடிகள் சத்தமிட்டு வருகின்றன என்றும் ஆனால், அவைகள் சரியான ஒப்பந்தங்கள். இந்த விடயத்தை சீனாவின் அடிவருடிகள் குழப்ப நினைத்தால் அதனை நாங்கள் நிச்சயம் எதிர்த்து நிற்போம் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு சத்தமிடும் ரெலோவின் தலைவர் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் மன்னார் மாவட்டத்தில் அதானி குழுமத்தின் முதலீட்டில் மேற்கொள்ளப்பட இருந்த காற்றாலை திட்டத்துக்கு தென்னிலங்கையிலிருந்து எதிர்ப்புக் காண்பிக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து அவர் குரல் எழுப்பவில்லை. அத்தோடு, எந்தவொரு தமிழ் பிரதிநிதியும் அது தொடர்பில் குரல் கொடுக்கவில்லை. தென்னிலங்கை சுற்றுச்சூழல் அமைப்புகள் என்போர் பொதுவாக இந்தியாவின் வடக்கு, கிழக்கு திட்டங்கள் தொடர்பில் சுற்றுச்சூழல் என்னும் பெயரில் தலையீடு செய்வதையும் இடையூறுகளை விளைவிப்பதையும் வழமையாகக் கொண்டிருக்கின்றனர். இறுதியில் குறித்த மன்னார் காற்றாலை திட்டத்திலிருந்து வெளியேறுவதாக அதானி குழுமம் அறிவித்திருந்தது.

இந்தியாவின் முதலீட்டு திட்டங்கள் மற்றும் வடக்கு, கிழக்கை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனைகளுக்கு மாறாக பயன்படுத்துவது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் அக்கறை காண்பித்தால் அது நல்ல விடயம்தான். ஆனால், வடக்கு, கிழக்கில் சீனா வருவதை அனுமதிக்க மாட்டோம் என்று கூறுமளவுக்கு வடக்கு, கிழக்கில் ரெலோவுக்கான அரசியல் வலிமை என்ன? முதலில் வடக்கு, கிழக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் தமிழ்க் கட்சிகள் தங்களை அரசியல் ரீதியில் பலப்படுத்திக் கொண்டால் அல்லவா சீனாவை தடுப்பது அல்லது எவ்வாறு விடயங்களை கையாள்வது என்று சிந்திக்க முடியும்.

சீனா வடக்கு, கிழக்குக்குள் வருவதும் வராமல் தடுக்கப்படுவதும் முற்றிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தீர்மானங்களிலேயே இருக்கின்றன. ஒருவேளை, சீனா வடக்கு, கிழக்குக்குள் வருவதென்று தீர்மானித்தால் அதனைத் தடுக்கும் ஆற்றல் தமிழ்க் கட்சிகளிடம் இல்லை.

எனினும், கொழும்பின் அணுகுமுறையானது வடக்கு, கிழக்கில் சீனாவை ஓர் எல்லைக்கு மேல் அனுமதிக்கக்கூடாது என்னும் கரிசனை கொண்டதாகவே இருக்கிறது. ஆனால், அது தொடர்ந்தும் முடியுமா என்பதுதான் பிரச்னை. கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் கிழக்கின் ஆளுநராக இருந்தவர் சீனாவை கிழக்குக்குள் உள்நுழைப்பதற்கான பல நகர்வுகளை மேற்கொண்டிருந்தார். ரணில் ஜனாதிபதியானமையைத் தொடர்ந்தே அவரை அப்பதவியிலிருந்து அகற்றினார். எனவே, நிலைமைகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது.

முதலில் சீனாவை ஒரு பக்கமாக வைத்துவிட்டு தங்களின் ஆற்றல் என்ன? தங்களை எவ்வாறு பொது அரசியல் வேலைத்திட்டங்களில் ஒருங்கிணைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றியே தமிழ் கட்சிகள் முதலில் சிந்திக்க வேண்டும். இந்திய பிரதமரை சந்தித்த பின்னர், சந்திப்பில் ஈடுபட்ட மூன்று கட்சிகளும் இணைந்து ஓர் ஊடக சந்திப்பைக்கூட நடத்த முடியவில்லை. இப்போது செல்வம் அடைக்கலநாதன் சொல்லும் விடயங்களை மூன்று கட்சிகளாகவும் ஏழு பிரதிநிதிகளாகவும் கூறியிருந்தால் அதற்கு அதிக பெறுமதி இருந்திருக்குமல்லவா!

# மக்களின் பிரச்னைகளை தீர்க்கும் வகையில் வனவள திணைக்களம் செயல்பட வேண்டும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

*கொழும்பு, ஏப்.11*

வனவளத் திணைக்களம் முன்வைத்த காலை எப்படி பின்வைப்பது என்று யோசிக்காமல் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் வகையில் செயல்பட வேண்டும்- இவ்வாறு கடற்தொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்தார். வனவளத் திணைக்களத்தால் வடக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்திம் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதேவேளை,

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றுக்கு எதிராக மிகக் காட்டமான கருத்துகளை முன்வைத்தார்.

அவர் கூறுகையில், வவுனியா மாவட்டத்துக்கு சிங்கள மாவட்ட செயலர் இருக்கின்றார். அந்த மாவட்டத்துக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக சிங்களவரான நான் இருக்கின்றேன். அப்படியிருக்கையிலேயே எனக்குத் தெரிந்து மடுகந்த குளத்தின் கீழ் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்த காணிகளை விடுவிப்பதற்கு மறுக்கின்றது. அது மக்கள் வயல் செய்த காணிகள். சிங்களவர்களுக்கே இவ்வாறான நிலைமை என்றால் தமிழ் மக்களின் நிலைமை சொல்லத் தேவை யில்லை. இந்த நாட்டில் போர் உருவாகுவதற்கு காணி பிரச்னையும் பிரதான கார ணம் என்பதை மறவாதீர்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலர்கள் ஒவ்வொருவரும் தமது மாவட்டத்தில் இந்த இரு திணைக்களங்களாலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பட்டியல்படுத்தினர். முன்னைய ஆட்சியில் விடுவிப்பதற்கு தங்களால் முன்வைக் கப்பட்ட கோரிக்கையின் 10 சதவீதத்தையே விடுவிக்க இணங்கியமையும் சுட்டிக்காட்டிய அவர்கள் அது போதாது எனவும் குறிப்பிட்டனர். இதற்கு மேலதிக மாக, விடுவிக்க இணங்கியதைவிட பல காணிகளை புதிதாக காடுகளாக அரசிதழ் வெளியிடுவதற்கு வனவளத் திணைக்களம் கோரியிருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இதனாலேயே முன்னைய ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் இணங்கிச் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

வவுனியா மாவட்ட செயலர், கடந்த ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக இருந்தவரது அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தான் செயல்பட்டதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் மக்கள் தினமும் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பட்டியல் படுத்தியதுடன், பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதனும் மேலதிக விடயங்களைத் தெரியப்படுத்தினார்.

வடக்கில் மிகப்பெரும் பாரதூரமான விடயமாக வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றின் செயல்பாடுகள் இருப்பதை ஏற்றுக்கொண்ட சுற்றாடல்துறை பிரதி அமைச்சர், இது தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகக் குறிப்பிட்டார். மேலும், ஜனாதிபதியின் செயலருடன் இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலை நடத்துவது பொருத்தமாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்டது. அதேநேரம், ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி என்ற வகையில் ஜனாதிபதியுடன் சந்தித்து அவரின் கவனத்துக்கு கொண்டு செல்லலாம் எனவும் பிரதி அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் மாவட்டச் செயலர்களால் தமது மாவட்டங்களில் விடுவிப்பதற்கு கோரிக்கை முன்வைத்த காணிகளை மீளவும் களப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.(எ - 02)

# நல்லூரில் கதாப்பிரசங்க பயிற்சி கருத்தரங்கு

*யாழ்ப்பாணம், ஏப்.11*

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கதாப்பிரசங்க பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டு நாட்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் காலை 09. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கதாப்பிரசங்க பாடநெறியில் கற்ற மாணவர்கள், கற்க இருக்கும் புதிய மாணவர்கள் மற்றும் கதாப்பிரசங்கத்தில் ஆர்வமுடையோர் யாவரும் கலந்து கொள்ள முடியும். கதாப்பிரசங்க வளவாளராக் கதாப்பிரசங்க வித்தகர் சின்னத்தம்பி சிறீதயாளன் கலந்து கொள்ளவுள்ளார். 13ஆம் திகதி கதாப்பிரசங்க அறிமுகக்கருத்தரங்கும் 15ஆம் திகதி செயன்முறை விடயமும் நிகழவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 11 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 28
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்துபோகும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். ஆதாயம் உண்டு.

**துலாம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். திய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் திருப்தி உண்டாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

# காணிகள் அபகரிப்பு, அபிவிருத்திக்கு தடை ஏற்படுத்துவதையே நாம் எதிர்க்கின்றோம்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் எடுத்துரைப்பு

கொழும்பு, ஏப். 11

காடுகளை அழிப்பது எங்கள் நோக்கமல்ல. காடுகளை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் மக்களின் காணிகளை அபகரிப்பது மற்றும் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதையே நாங்கள் எதிர்க்கின்றோம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்திம் நடைபெற்றது.

சுற்றாடல்துறை பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி மற்றும் காணி, நீர்ப்பாசனத்துறை பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றின் பாதுகாவலர் நாயகங்கள், காணி ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்களும் இதில் பங்கேற்றனர். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் இ. சந்திரசேகர், வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆளுநர் மேலும் கூறுகையில்,

"மிக நீண்ட காலப் போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களது காணிகள் ஆள்நடமாட்டம் அற்ற நிலையில் அவையே காடுகளாக வளர்ந்துள்ளன. அவற்றை கூகுள் வரைபடம் மூலமே வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக அடையாளப்படுத்தி 2012ஆம் ஆண்டின் பின்னர் அரசிதழ் வெளியிட்டுள்ளன. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசிதழ் வெளியிடப்பட்டவை தொடர்பில் எந்தக் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை. போரின் பின்னர் கூகுள் வரைபடத்தை மாத்திரம் பயன்படுத்தி, கள அலுவலர்களுக்கும் பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் தெரியாமலேயே அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது. அதுவே தற்போதுள்ள சகல பிரச்னைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிட்ட அரசிதழ்களில் குறிப்பிடப்படும் பகுதிக்குள் மக்கள் முன்னர் வாழ்ந்தமைக்கான கட்டடங்களின் எச்சங்கள், கிணறுகளின் எச்சங்கள், வயல்கள் செய்தமைக்கான அடையாளங்கள் என்பன இப்போதும் காணப்படுகின்றன. அவை மக்களின் வாழ்விட மற்றும் வாழ்வாதார நிலங்கள் தான் என்பதற்கு இவை சிறந்த சான்று. வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன தான் தோன்றித்தனமாகச் செயல்படுவதால், மக்களின் வாழ்வாதாரம், குடியேற்றம் என்பன மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கின் அபிவிருத்திச் செயல்பாடுகளும் திட்டமிட்ட ரீதியில் முடக்கப்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது.

இந்தப் பிரச்னைகள் தொடர்பில் மிக நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தாலும் அதற்குத் தீர்வு காணப்படாமல் இழுதடித்துச் செல்லப்படுகின்றது. எனவே, மக்களின் காணிகளையும் அபிவிருத்திக்குத் தேவையான காணிகளையும் விடுவிப்பதே தீர்வாகும். அதனை உடனடியாகச் செய்ய வேண்டும்"- என்றார்.

(எ- 02)

# வவுனியாவில் 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை ஆரம்பம்



வவுனியா, ஏப். 11

வவுனியாவில் 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. விமலரூபன் தெரிவித்தார்.

பருவகால மழை, கடந்த வருட இறுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் அவற்றின் நீர் கொள்ளவை எட்டியுள்ளன.

இதன் காரணமாக கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக அளவை விட இம்முறை 5000 ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(எ-10)

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனையும் கண்காட்சியும்



வவுனியா, ஏப். 11

தமிழ், சிங்கள (சித்திரை) புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனையும் கண்காட்சியும் நேற்று முன்தினம் வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.

செட்டிக்குளம் சமுர்த்தி வங்கி மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினர் ஏற்பாட்டில் இந்த மலிவு விற்பனையும் கண்காட்சியும் நடைபெற்றது.

இந்த நிகழ்வை பிரதேச செயலாளர் கே. சுலோஜினி மற்றும் மாவட்ட சமுர்த்தி வங்கி சிரேஷ்ட முகாமையாளர் வில்வராசா ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துகளால் நாளாந்தம் 30 முதல் 35 பேர் வரை பலி

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் நாளாந்தம் 30 முதல் 35 வரையான, விபத்துகளுடன் தொடர்புடைய மரணங்கள் பதிவாகுவதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த சுகாதார அமைச் சின் தொற்றா நோய் தொடர் பான விசேட மருத்துவ நிபுணர் சமிதா சிறிதுங்க இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இலங்கையில் 10,000 முதல் 12,000 பேர் வரை வருடாந்தம் விபத்துகளால் உயிரிழ ந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கோவிட்-19 பரவலுக்குப் பின்னர் 2019ஆம் ஆண்டு முதல் விபத்துகள் மற்றும் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2019ஆம் ஆண்டுக்கு முன்னர் வருடாந்தம் விபத்துகளால் பாதிக்கப்பட்ட 1.3 மில்லியன் பேர் வைத்தியசா லைகளில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அந்த எண்ணிக்கை தற்போது ஒரு மில்லியனாக உள்ளது.

எவ்வாறாயினும் தற்போதைய போக்கின்படி, அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளில் குறித்த எண்ணிக்கை 2 அல்லது 3 இலட்சத்தால் அதிகரிக்கலாம்.

இதனை மாற்றியமைப்பதற்கு ஒருங்கிணைந்த திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சமிதா சிறிதுங்க தெரிவித்தார். (அ)

# அதிபர்கள் நியமனத்தின்போது இனிமேல் சகல பாடசாலைகளுக்கும் ஒரே நடைமுறை



கொழும்பு, ஏப். 11

**அதிபர்கள் நியமனத்தின்போது சகல பாடசாலைகளுக்கும் ஒரே கொள்கை ஒரே நடைமுறையே பின்பற்றப்படுவதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி தொடர்பில் எழுந்துள்ள பிரச்னை குறித்து எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னைய அரசாங்கங்கள் அதிபர்கள் நியமனத்தை சிக்கலாக்கியிருந்தன. பல ஆண்டுகளாக முறையான நடைமுறைகள் இல்லாமல் பதில் அதிபர்களை நியமிப்பதன் மூலம் ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் அநீதியிழைக்கப்படும் வகையில் பாடசாலை நிர்வாகத்தை மிகவும் கேள்விக்குரிய நிலைக்கு தள்ளியிருந்தது.

இந்த நடைமுறை தற்போதைய விதிமுறைகளின்படி, சரியான முறையைப் பயன்படுத்தி சரி செய்யப்படுகிறது. ஒருவருக்கு அதிபர் பதவி வகிப்பதற்குத் தேவையான தகுதிகளின் அடிப்படையில், அனைத்து தேசியப் பாடசாலைகளுக்கும், வெற்றிடமாக உள்ள இடங்களுக்கும் நேர்முக பரீட்சைகள் மூலம் அதிபர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொருவிதமாக பாரபட்சமாக நடத்துவதில்லை. அனைத்து பாடசாலைகளுக்கும் ஒரே கொள்கை மற்றும் நடைமுறையே பின்பற்றப்படுகின்றன-என்றார். (அ)

# ஹோட்டல் உரிமையாளரை கடத்தி கப்பம் பெற்ற இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 5 பேர் கைது!

கொழும்பு, ஏப். 11

கடந்த 06 ஆம் திகதி அநுராதபுரம் மிஹிந்தலை பகுதியிலுள்ள ஹோட்டல் உரிமையாளர் ஒருவரை கடத்திச் சென்று 45 இலட்சம் ரூபாய் பணத்தை கப்பமாக பெற்றுக்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் இருவர் மற்றும் சிவில் பாதுகாப்பு படை பிரிவை சேர்ந்த சிப்பாய் உட்பட 5 சந்தேக நபர்கள் மிஹிந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிஹிந்தலை நகரிலுள்ள ஹோட்டல் உரிமையாளரான ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தரினால் 07 ஆம் திகதி மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலனறுவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு சிப்பாய் உட்பட 5 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலநறுவை பகுதியை வசிப்பிடமாக கொண்ட 30 வயதிற்கும் 48 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவின் அடிப்படையில் மிஹிந்தலை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினர், சந்தேக நபர்களை தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சி சபை தேர்தல் 128 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஏப். 11

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் 128 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் நேற்று வரை இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வேட்பாளர்கள் 13 பேரும், ஆதரவாளர்கள் 43 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 11 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் நேற்று முன் தினம் முதல் நேற்று காலை வரை குற்றங்கள் தொடர்பில் 02 முறைப்பாடுகளும், தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் 03 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இது தொடர்பில் ஒரு ஆதரவாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுற்றுலா வீஸாவில் தொழில் புரிந்த பல வெளிநாட்டவர்கள் நாடு கடத்தல்

கொழும்பு, ஏப். 11

சுற்றுலா வீஸாவில் இலங்கையில் தொழிலில் ஈடுபட்டிருந்த பல வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சுற்றுலா பயணிகளை கைது செய்வதற்கான முயற்சியின் போது, அவர்களுக்கு சொத்துகளை வாடகைக்கு வழங்கியிருந்த உள்ளூர் பிரஜைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டின் சட்டம் நிலை நிறுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான பொறுப்பை பொதுமக்களும் கொண்டிருக்க வேண்டும். அந்நிய செலாவணி நெருக்கடிக்குப் பிறகு உக்ரைன், ரஷ்ய மற்றும் இஸ்ரேலிய நாட்டினர் சுற்றுலா வீஸாவில் வந்து இலங்கையின் கடலோர நகரங்களில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து சுற்றுலா தொழிற்துறையினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் தொழிலில் ஈடுபடும் வெளிநாட்டவர்களில் சுற்றுலா வீசாவை புதுப்பித்துத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் உள்ளூர் சொத்துகளை குத்தகைக்கு அமர்த்தி வணிகத்தில் ஈடுபவர்களும் உள்ளனர்.

இவற்றை நாட்டின் வருவாய் ஈட்டலில் பாதிப்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளாக அரசாங்கம் அடையாளம் கண்டதைத் தொடர்ந்து, அவ்வாறு தொழிலில் ஈடுபட்ட சுற்றுலா பயணிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய வணிக செயல்பாடுகள் உள்ளூர் நிறுவனங்களிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

சில சுற்றுலா பயணிகள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் செயல்பட்டு வருவதாகவும் விசாரணைகளில் கண்டறியப்பட்டிருந்தது-என்றார். (அ)

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை




கொழும்பு, ஏப். 11

4 மாவட்டங்களுக்கு முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் மண்சரிவு ஏற்படும் பகுதிகளை அண்டியவர்கள் வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (அ)

# 30 இலட்சம் சுற்றுலாவிகளை அழைத்து வருவதே இலக்கு

## சுற்றுலா பிரதி அமைச்சர்

கொழும்பு, ஏப். 11

சுற்றுலா கைத்தொழிலு டன் சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களை ஒன்றிணைத்து தேசிய சுற்றுலா ஆணைக்குழுவொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாப் பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடக கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

சுற்றுலாக் கைத்தொழில் நாட்டில் முதன்மைக் கைத்தொழில் என்றும் இவ்வாண்டில் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டிக்கு அழைத்து வருவதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்ட பிரதி அமைச்சர், நிலைபேறான சுற்றுலாப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக சுற்றுலா அமைச்சு செயற்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் காணப்பட்ட வீஸா பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக விரைவாக செயல்பட்டதாகவும், எதிர்காலத்தில் சுற்றுலாத் துறையில் மாற்றங்கள் பலவற்றை மேற் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சுற்றுலா நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டவர்கள் நாட்டுக்கு வியாபார நோக்கங்க ளுக்காக வருகை தருவதனால் பிரச்னை ஏற்பட்டதாகவும் தற்போது அப்பிரச்னையை முறையாக தீர்த்து வருவதாகவும் குறிப்பிட்ட பிரதி அமைச்சர், அமைச்சிடம் காணப்படும் காணிகளை பயன்படுத்தி சுற்றுலா கைத்தொழிலை முன் னேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

எல்ல, காலி, சிகிரியா போன்ற பிரதான சுற்றுலா கவர்ச்சி மிகுந்த இடங்களின் அண்மையில் அவசர சிகிச்சை பிரிவுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சுட்டிக்காட்டிய பிரதி அமைச் சர், சுற்றுலா தளங்களின் அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தங்களால் இலங்கைக்கு அச்சுறுத்தல் இல்லை!

## அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, ஏப். 11

**"இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமானது இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது. அதேபோல நாம் நாட்டை காட்டிக்கொடுக்கவும் இல்லை." என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எந்தவொரு நாடாலும் விலைக்கு வாங்க முடியாது இலங்கையின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே இரு தரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பாராளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

இதன்போது பாதுகாப்பு சார் ஒப்பந்தம் பற்றிய கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு-இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டது. அது பாதுகாப்பு ஒப்பந்தம் அல்ல. பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமென தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளிலும் அமுலில் உள்ள உள்நாட்டு சட்டம் மற்றும் தேசியக் கொள்கை ஆகியவற்றுடன் முரண்படாத விதத்திலும், சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு எவ்வித தாக்கங்களும் ஏற்படாத வகையிலும் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைந்துள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை இடம்பெறும்போது தேசிய சட்டம், இராணுவ சட்டம், அரசுகளின் சுயாதீனம், ஆட்புல ஒருமைப்பாடு என்பன மீறப்படமாட்டாது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல உள்விவகாரங்களில் தலையிட முடியாது, ஐ.நா. மூலதர்மங்களுக்கு மதிப்பளித்தல் ஆகிய விடயங்களில் இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் தற்போதும் முப்படைகளுக்கிடையில் பயிற்சிகள் நடக்கின்றன. உபகரணங்கள்வழங்கப்படுகின்றன. அவற்றை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்குரிய ஒப்பந்தமே இது.

தகவல் பரிமாற்றமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது இந்தியாவே முன்கூட்டியே புலனாய்வு தகவலை வழங்கி இருந்தது. இதற்கு முன் இப்படியான ஒப்பந்தம் இருக்கவில்லை. அதனை நாம் கைச்சாத்திட்டுள்ளோம்.

ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் தகவல்கள் பரிமாற்றப்படும். இப்படியான விடயங்கள் மட்டுமே மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் நடைபெறும்.

இந்தியாவுக்கு எதிராக இலங்கையின் நிலப்பரப்பை பயன்படுத்த இடமளிக்கமாட்டோம் என ஏற்கனவே தெளிவாக கூறிவிட்டோம். சீனாவில் பிரிவினைவாத பிரச்சினை ஏற்பட்டால்கூட சீனாவுக்கு எதிராக நாம் எமது நாட்டு நிலப்பரப்பை பயன்படுத்த இடமளிக்கமாட்டோம். இது எமது கொள்கை.

பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு சட்டமா அதிபர் ஒப்புதல் வழங்கியுள்ளார். முப்படைகளுக்கு அனுப்பட்டு யோசனைகள் உள்வாங்கப்பட்டு, திருத்தங்கள் செய்யப்பட்டன. பின்னர் அமைச்சரவையின் ஒப்புதலும் பெறப்பட்டது.

எனவே, எமது நாட்டுபாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படாது. நாட்டுக்கு நன்மையே பயக்கும்.

இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவில்லை. தகவல் அறியும் சட்டத்தின்கீழ் அவற்றை பெறலாம்.

நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக உயிரை பணயம் வைத்து போராடியவர்கள் நாம். எனவே, எந்தவொரு நாடாலும் எம்மை விலைக்கு வாங்கவும் முடியாது. அடிபணிய வைக்கவும் முடியாது-என்றார். (அ)

# நாட்டில் தீவிரமடையும் சிக்குன்குனியா பரவல்!

கொழும்பு, ஏப். 11

நாட்டில் மீண்டும் சிக்குன்குனியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளமையினால், இது தொடர்பான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய உதவியை நாடுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக தற்போது நுளம்புகளின் பரவல் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மீண்டும் நாட்டில் சிக்கன்குனியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதன் மூலம் சிக்குன்குனியா பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் சுமார் 115 நாடுகளுக்கு பரவியுள்ள சிக்குன்குனியா நோய் தற்போது இலங்கையிலும் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது, நாட்டில் 190 சிக்குன்குனியா நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, அவற்றில் 65 பேர் வைத்திய ரீதியாக சிக்குன்குனியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, டெங்கு நோய் மீண்டும் பரவி வரும் நிலையில், இரத்தினபுரி வைத்தியசாலையில் ஊழியர்கள் 37 பேர் உட்பட 87 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய ஹொரணை - எல்லகந்த பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு மலேரியா தொற்று இருப்பதும் ஹொரணை மாவட்ட வைத்தியசாலையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு இலங்கை மலேரியா இல்லாத நாடாக அறிவிக்கப்பட்ட போதிலும், இந்தாண்டு இதுவரை 14 மலேரியா நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய மலேரியா கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# கைத்துப்பாக்கி, மகசினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 11

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகில் நேற்று இரவு ஒரு கைத்துப்பாக்கி, ஒரு மகசின் மற்றும் 12 தோட்டாக்களும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் 41 வயதுடைய இரத்மலானை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

இவர் கடந்த 2018 டிசெம்பரில் நடந்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக கல்கிசை பொலிஸாரால் முன்னர் கைது செய்யப்பட்டவர் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# உச்சம் தொடும் சூரியன்!

கொழும்பு, ஏப். 11

சூரியனின் வடதிசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக, இம்மாதம் 14 ஆம் திகதி வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராகச் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது. அதற்கிணங்க நேற்று நண்பகல் 12.11 அளவில் ஹத்திகுச்சி, கலங்குட்டிய, ஹல்மில்லேவ, இபலோகம, பலுகஸ்வெவ, ஹபரணை ஆகிய பகுதிகளுக்கு நேராகச் சூரியன் உச்சம் கொடுத்தது

இதேவேளை,தென்மேற்கு வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதியில் பலத்த மழை, பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில் குறித்த கடல் பகுதியில் பயணிக்கும் பல நாள் மீன்பிடி படகுகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயற்கை பேரிடர் முன்னெச்சரிக்கை நிலையம் அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரித்துள்ளது.

மத்திய தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 12 மணி நேரத்தில் மேற்கு - மத்திய வங்கக் கடலில் வடக்கு நோக்கி நகர வாய்ப்புள்ளது.பலத்த காற்று அதன்பிறகு, அடுத்த 24 மணி நேரத்தில் மத்திய வங்காள விரிகுடாவில் படிப்படியாக பலவீனமடைய வாய்ப்புள்ளது.(அ)

# கூரை சோலர் இணைப்பு வழங்கும்போது மக்களிடம் கட்டணத்தை கோர முடியாது!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 11

கூரை மேல் சோலர் இணைப்பு வழங்கும்போது, புதிய இணைப்பு மற்றும் கட்டமைப்புக்கான நிறுவுதலுக்காக, வாடிக்கையாளர்களிடம் இருந்து கட்டணம் எதையும் கோர முடியாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர்,

2023 ஆம் ஆண்டு, கூரை மேல் சோலர் இணைப்பு அனுமதிக்காக விண்ணப்பித்த போது, அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆனால், 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த, அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்கு, செல்வாக்கின் அடிப்படையில், பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டை அடுத்து, முறைப்பாட்டாளருக்கு அனு மதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக 11 இலட்சம் ரூபா செலுத்துமாறு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகம் கோரியமை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவில், இலங்கை மின்சார சபை, கூரை மேல் சோலர் இணைப்பு அனுமதி வழங்கும் போது,

அந்தந்தப் பகுதிகளுக் கான மேலதிக புதிய இணைப்பு மற்றும் கட்டமைப்புக்கான நிறுவுதலுக்காக, வாடிக்கையாளர்களிடம் இருந்து கட்டணம் எதையும் கோர முடியாது என, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாண பிராந்திய மின் பொறியியலாளருக்கு மீண்டும் பணித்துள்ளது. (அ)

# ரூ. 82 மில்லியனுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது!

கொழும்பு, ஏப். 11

நீர்கொழும்பு - பிட்டிபன பகுதியில் 82 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் 02 சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் நீர்கொழும்பின், பிட்டிபன பகுதியிலும் கொழும்பின் வாழைத்தோட்டம் பகுதியிலும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சுமார் 205 கிலோ 958 கிராம் கேரள கஞ்சாவைக் கொண்டு சென்ற ஒரு [illegible] காருடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 35 மற்றும் 42 வயதுடைய மன்னார் பேசாலையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக துன்கல்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு நாட்டை விற்பதாக திட்டமிட்டு தவறான பிரசாரங்கள்!

## மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 11

**இந்தியாவுக்கு நாட்டை விற்பதாக திட்டமிட்ட வகையில் தவறான பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பு, பொரளையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்குவதாக உறுதியளித்தோம். அதேபோல செயற்பட்டு வருகிறோம்.

எமது ஆட்சி வெறும் ஆறு மாதங்களுக்குத் தான் என சிலர் கூறினார்கள். எமது உறுதிமொழிகளை நிறைவேற்றி நாட்டை சிறந்த முறையில் முன்னேற்றுவதே எமது நோக்கமாகும். அதுவரை நாம் பின்வாங்க மாட்டோம்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். நாம் இரு தரப்பு ஒப்பந்தங்கள் ஊடாக நமக்கு சாதகமான பல வேறு திட்டங்களை பெற்றுக் கொண்டோம்.

எனினும் நாட்டை விற்பனை செய்வதாக திட்டமிட்ட வகையில் தவ றான பிரசாரம் முன்னெடுக்கப் படுகிறது. எமது கொள்கை அதுவல்ல. நாட்டில் கடந்த காலங்களில் இருந்த ஆட்சி யாளர்களே நாட்டை விற்பனை செய்ய முயற்சித்தார்கள்.

உதாரணத்துக்கு மில்கோ நிறுவனத்தையும் அந்த நிறுவனத்துக்கு சொந்தமான 27 ஆயிரம் ஏக்கர் காணியையும் இந்தியாவின் அமுல் நிறுவனத்துக்கு விற்பனை செய்ய திட்டமிட்டார்கள். நாமே அதனை தடுத்து நிறுத்தினோம்.

ஊழலற்ற ஆட்சியை மேலும் பலப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உண்டு-என்றார். (அ)

# இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படாமல் தண்டனை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 11

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர் ஒருவரை கைது செய்து குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பட்டலந்த வதை முகாம் பற்றிய விசாரணை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிக்கர் ஒட்டிய குற்றச்சாட்டில் 22 வயதான முஸ்லிம் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார். அதன் பின்னர் அரசாங்கத்துக்கு எழுந்த எதிர்ப்பு மற்றும் சர்வதேச அழுத்தம் காரணமாக அவர் விடுதலை செய்யப்பட்டார். புனித ரமழான் மாதத்தில் பலஸ்தீனத்தில் 400 பேரை கொலை செய்தது இஸ்ரேல் இராணுவம்.

அதற்கு எதிராக செயற்பட்ட காரணத்துக்காக பொலிஸாரால் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உண்மையில் இளைஞரிடம் எந்தத் தவறும் கிடையாது. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில் அந்த இளைஞர் தொழிலிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

இதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் அரசாங்கமும் பொறுப்பு கூற வேண்டும்-என்றார். (அ)

# வறுமை நிலை உயரும்!

கொழும்பு, ஏப். 11

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பின் பாரதூரத்தை அரசாங்கம் அறிந்திருக்கவில்லை என வயம்ப பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் அமிந்த மெத்சில தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இறக்குமதிப் பொருட்களுக்கு அமெரிக்கா வரி விதிப்பை மேற்கொள்ளப் போகிறது என கடந்த வருடம் அறிவிக்கப்பட்டது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் அதற்கு தயாராகின. எனினும் அரசாங்கம் அதன் பாரதூரத்தை அறிந்திருக்கவில்லை.

இப்போதும் இருளுக்குள் எதையோ தேடுவதைப் போல ஆளும் தரப்பின் அமைச்சர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்தில் இதன் ஆபத்து அறியாமல் செயற்பட்டுள்ளார்கள்.

அமெரிக்கா வரி விதித்துள்ள காரணத்தினால் கிராமத்து மக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள். பெரும் எண்ணிக்கையிலானோர் தொழில் வாய்ப்பை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறானால் நாட்டின் வறுமை மேலும் அதிகரிக்கும். இதனால் மற்றுமொரு போராட்டம் உருவாகுவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன.

ஆதலால், குழுக்கள் அமைப்பதை விட மிக ஆழமாக சிந்தித்து அடுத்த கட்ட நகர்வை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை காணப்படுவதால் ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடி அந்த நாடுகளுக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப்படுத்துக!

கொழும்பு, ஏப். 11

பாராளுமன்றக் குழுக்களினால் வழங்கப்பட்ட இது வரை நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் குழுக்களின் விதப்புரைகள், சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களினால் அவை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் மதிப்பாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு இதனைத் தீர்மானித்துள்ளது.

இந்தக் குழு அதன் தலைவர் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு ஹர்ஷண நாயணக்கார தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, குழுவினால் முன்னுரிமை வழங்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டிய, நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பொது மனுக்கள் பற்றிய குழுவினால் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரில் வழங்கப்பட்ட 80க்கும் அதிகமான விதப்புரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டவில்லை என்பது புலப்பட்டது.

அத்துடன், அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு ஆகிய குழுக்களினால் வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குவதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களுக்கு கடிதங்களை அனுப்புவதற்கும், ஒரு மாத காலத்துக்குள் நடைமுறைப்படுத்த முடியாது எனின் அதற்கான காரணங்களைக் குழுவுக்கு எழுத்துமூலமாகப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க மற்றும் ஒஷானி உமங்கா ஆகியோரும் பாராளுமன்ற அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

# பொலிஸ் திணைக்களத்துக்கு 2500 பேரை இணைத்துக் கொள்ள துரித நடவடிக்கை

கொழும்பு, ஏப். 11

பொலிஸ் திணைக்களத்துக்கு இரண்டாயிரத்து 500 பேரை இணைத்துக்கொள்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொலிஸ் திணைக்களம் கடந்த காலங்களில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது. அதனை தவிர்க்கும் முகமாக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கிறோம். சிவில் பாதுகாப்பு குழுக்களின் ஊடாக பொலிஸ் திணைக்களத்தை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக நாடு முழுவதும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. பாடசாலை மட்டத்திலும் போதைப்பொருள் விநியோகம் வியாபித்துள்ளது.

அத்துடன் பாதாள குழுவினரின் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சக்திமிக்க பொலிஸ் திணைக்களம் அவசியம்.

பொலிஸ் திணைக்களத்துக்கு இரண்டாயிரத்து 500 பேரை இணைத்துக் கொள்வதற்கான துரித நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான வர்த்தமானியை அடுத்த மாதமளவில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுகயீனமாகின்ற போது அவர்களுக்கு உரிய மருந்துகள் பொலிஸ் வைத்தியசாலையில் காணப்படுவதில்லை.

ஆதலால் அதற்கும் உரிய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் பொலிஸாரின் சம்பளத்தை அடுத்த வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்-என்றார். (அ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு திட்டம்

கொழும்பு, ஏப். 11

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். குறிப்பாக மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களில், சிவில் உடையில் புலனாய்வு பிரிவு அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கொழும்பு பகுதியில் பாதுகாப்புக்காக போக்குவரத்து பொலிஸார் உட்பட சுமார் 6 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, பண்டிகைக் காலத்தில் மேற்கொள்ளப்படும் விசேட சோதனைகளின்போது புத்தாண்டு விற்பனையில் ஈடுபட்ட 36 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தை மீறி, நுகர்வோரை தவறாக வழி நடத்தும் வகையில் செயற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக இந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருதில் சிரமதானம்

சாய்ந்தமருது, ஏப்.11

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஹெல்த் சென்ரருக்குச் சொந்தமான வளாகம் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் சிரமதானம் செய்யப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலயத்துக்கு முன்பாகவும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள இந்த வளாகத்தில், பல வருட காலமாக

குப்பைகள் நிரம்பியும் நுளம்புகள் தாக்கம் காரணமாகவும் மற்றும் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதாலும் இவ்வளவை சுத்தப்படுத்தித் தருமாறு பிரதேச மக்கள் ஆதம்பாவா எம்.பியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, கல்முனை மாநகர சபையால் அவர்களது கனரக இயந்திரம் மூலமும் கல்முனை மாநகர சபை ஊழி யர்களினால் இவ்வேலைத்திட் டம் முன்னெடுக்கப்பட்டது. (எ)

# "மூவின மக்களின் தேவைகளை நாம் நிச்சயம் பூர்த்தி செய்வோம்"

சம்மாந்துறை, ஏப். 11

மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சபையாக சம்மாந்துறை பிரதேச சபையை மாற்றிய மைப்போம் என்று ஐக்கிய மக் கள் சக்தியின் வேட்பாளரும் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளருமான ஹசன் அலி தெரிவித்தார்.

சம்மாந்துறையில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# அரபுக்கல்லூரி ஆசிரியர்களுக்காக பயிற்சி நிலையம் அமைக்கப்படும்

## ஹிஸ்புல்லாவின் கேள்விக்கு அமைச்சர் பதில்

கொழும்பு, ஏப்.11

**அரபுக்கல்லூரிகள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இமாம்களுக்கு பயிற்சி நிலையம் இல்லை. எதிர்காலத்தில் இவர்களுக்கு முறையான பயிற்சி வழங்குவதற்கான பயிற்சி மத்திய நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கிறோம் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஹிஸ்புல்லாவால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.


"அரபுக்கல்லூரிகள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இமாம்களுக்கு பயிற்சி நிலையம் என ஒன்றுல்லை. இவ்வாறு முறையான பயிற்சி நிலையம் இல்லாவிட்டாலும் அரபுக்கல்லூரிகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்காக முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஊடாக வருடாந்தம் பல்வேறு பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

அதேநேரம், அரபுக்கல்லூரிகளுக்கான புதிய பாடத்திட்டம் தற்போது திருத்தப்பட்டு வருகிறது. அது அனுமதிக்கப்பட்ட பின்னர் எமது கல்வி வரைபுக்குள் முறையாக இணைத்துக்கொள்வதற்கு திட்டமிட்டிருக்கிறோம். இந்த பாடத்திட்டம் தற்போது கல்வி அமைச்சில் இறுதிக் கட்டத்தில் உள்ளது.

புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் அரபு கல்லூரிகளின் கல்வித்துறையை முன்னேற்றுவதற்காக ஆசிரியர்களுக்கு மிகவும் ஆரோக்கியமான பயிற்சியை வழக்குவதே எமது எதிர்பார்ப்பு"- என்றார்.(எ)

நெல் விதைப்பை தொடர்ந்து

# காடுகளை நோக்கி யானைகளை அனுப்பும் திட்டம் முன்னெடுப்பு



கல்முனை, ஏப். 11

வேளாண்மை நடவடிக்கைகளுக்காக மீண்டும் உழவு வேலைகள் ஆரம்பித்துள்ள நிலையில் வயல் வெளிகளில் நடமாடுகின்ற காட்டு யானைகளை அகற்றும் நடவடிக்கைகளை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். நெல் விதைப்பை தொடர்ந்து காடுகளை நோக்கி யானைகளை அனுப்பும் நடவடிக்கைகள் மும்முரமாக மேற கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தற்போது சுமார் 200இற்கும் அதிகமான யானைகள் பட்டி பட்டியாக வருகை தருவதுடன் பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன.அண்மைக்காலமாக இப்பிரதேசத்தில் கூட்டமாக ஊடுருவும் யானைகள் காய்க்கும் தென்னை மரங்கள் உட்பட பயன் தரும் மரங்கள், வீட்டுத் தோட்டங்கள், குடியிருப்புகள், வேலிகள் என்பனவற்றை துவம்சம் செய்து வருகின்றன.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் ,அக்கரைப்பற்று ,சம்மாந் துறை, நிந்தவூர்,அம்பாறை ,இறக்காமம் ,மத்திய முகாம் ஆகிய இடங்களில் இவ்வாறு யானைகளின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

தினமும் அப்பகுதிக்கு வரும் யானைக் கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருவதுடன் இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர். (எ-01)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து அலுவலர்களுக்கு செயலமர்வு


திருகோணமலை, ஏப்.11

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் தமிழ் மொழி பேசும் சிரேஷ்ட தலைமை தாங்கும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரின் வகிபாகம், நியமனம் கிடைத்த பின் பூர்வாங்க தயார்படுத்தல், வாக்கெடுப்பு தினத்துக்கு முன்னைய நாள் கடமைகள், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்கெண்ணலுக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல், வாக்களிப்பு நிலையமொன்றின் அமைப்பு, முன்கூட்டியே பூரணப்படுத்த வேண்டிய படிவங்கள், வாக்கெடுப்பு தின நடவடிக்கைகள், வாக்களிப்பு நிலைய முகவர்கள், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரின் முத்திரை, இரகசியத்தை பற்றிய உறுதியுரை, வாக்கெடுப்புக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கடமைகள், வாக்கெடுப்பு நிலையத்தில் ஏனைய எழுதுநர்களின் நடவடிக்கைகள், வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அடையாள அட்டைகள், தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள், வாக்கெடுப்பு நிலையத்துக்குள் அல்லது அதனைச் சூழவுள்ள பகுதிகளில் தடை செய்யப்பட்ட நடத்தைகள், வாக்கெடுப்பை முடிவுறுத்தல், வாக்கெடுப்பு முடிவடைந்ததும் வாக்குப் பெட்டியை பொறியிடும் முறை போன்ற பல விடயங்கள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன் மற்றும் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ். கே. டி. நிரஞ்சன் ஆகியோரால் தெளிவூட்டப்பட்டன.

இந்தச்செயலமர்வில்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாசன்சுகுண தாஸ்மற்றும்சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு அலுவலக தளபாடங்கள் வழங்கல்



மாளிகைக்காடு, ஏப்.11

அம்பாறை மாவட்டத்தில் இயங்கும் மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸின் 100 திட்டத்தின் கீழ் சுமார் 03 இலட்சம் ரூபாய் பெறுமதியான அலுவலக தளபாடங்கள் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தேவையான இதர உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ)



அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க கருத்திட்ட பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி வர்த்தக கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் சாய்ந்தமருது வொலிவேரியன் பல்தேவைக் கட்டட மண்டப வளாகத்தில் நேற்று நடைபெற்றது.இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

(படங்கள்- நூருல் ஹுதா உமர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை தவிர பிற நாடுகளுக்கான வரிவிதிப்பு தற்காலிகமாக நிறுத்தம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திடீர் முடிவு

வாஷிங்டன், ஏப். 11

**சீனாவைத் தவிர பிற நாடுகளுக்கான வரி விதிப்பை தற்காலிகமாக நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திடீர் முடிவு எடுத்துள்ளார்.**



அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். அமெரிக்க பொருட்களுக்கு வரி விதிக்கும் நாடுகளுக்கு அதே விகிதத்தில் பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று அவர் அறிவித்தார். இதன்படி, கடந்த 2ஆம் திகதி எந்தெந்த நாடுகளுக்கு எத்தனை சதவீதம் வரி என்று ட்ரம்ப் அறிவித்தார். இந்த வரிவிதிப்பு நேற்று முன்தினம் 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் அவர் அறிவித்தார்.

இலங்கை பொருட்களுக்கு 44 சதவீதமும் இந்திய பொருட்களுக்கு 26 சதவீதமும் வரி விதித்தார். சீன பொருட்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட 20 சதவீத வரியுடன் கூடுதலாக 34 சதவீத வரி விதித்தார். அதற்கு சீனா பதிலடியாக, அமெரிக்க பொருட்களுக்கு 34 சதவீத வரி விதித்தது. அந்த வரியை 8ஆம் திகதிக்குள் இரத்து செய்யாவிட்டால், சீன பொருட்கள் மீது மேலும் 50 சதவீத வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் மிரட்டல் விடுத்தார். ஆனால், சீனா இரத்து செய்யவில்லை. இதனால், சீன பொருட்கள் மீது கூடுதலாக 50 சதவீத வரி விதிக்கப்பட்டது.

இத்துடன், சீன பொருட்கள் மீதான மொத்த வரி 104 சதவீதமாக உயர்ந்தது. அமெரிக்காவுக்கு பதிலடியாக, அமெரிக்க பொருட்கள் மீது சீனா மேலும் 50 சதவீதம் வரி விதித்தது. இதனால், அமெரிக்க பொருட்கள் மீதான சீனாவின் வரிவிதிப்பு 84 சதவீதமாக உயர்ந்தது. இது, நேற்று வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வந்தது. அமெரிக்காவின் வரி விதிப்பு நடவடிக்கை காரணமாக சர்வதேச அளவில் பொருளாதார நிலையற்ற தன்மை ஏற்படும் என்ற அச்சம் எழுந்த நிலையில், திடீரென வரி விதிப்பை நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார். 90 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும் சீனாவுக்கு மட்டும் விதிவிலக்கு கிடையாது எனவும் ட்ரம்ப் நேற்று அறிவித்துள்ளார். (எ)

தீவிரமடையும் வர்த்தகப்போர்

# சீன இறக்குமதிகள் மீதான வரிகள் 125 சதவீதம் உயர்வு

வாஷிங்டன், ஏப். 11

சீனாவுக்கு விதிக்கப்படும் இறக்குமதிகள் மீதான வரியை 125 சதவீதமாக உயர்த்தி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

பரஸ்பர வரிவிதிப்பு என்ற பெயரில் இலங்கை, இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகளுக்கு ட்ரம்ப் கூடுதலாக வரி விதித்துள்ளார்.

இந்த நிலையில் சீன இறக்குமதிகள் மீதான வரிகள் 125 சதவீதம் உயர்த்தப்படுவதாக ட்ரம்ப் நேற்று அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

உலக சந்தைகளுக்கு சீனா காட்டிய மரியாதையின்மையின் அடிப்படையில், அமெரிக்காவால் சீனாவுக்கு விதிக்கப்படும் வரியை 125 சதவீதமாக உயர்த்துகிறேன். இது உடனடியாக அமுலுக்கு வருகிறது. வர்த்தகம், வர்த்தகத் தடைகள், கட்டணங்கள், நாணயக் கையாளுதல் மற்றும் நாணய மற்ற கட்டணங்கள் தொடர்பில் விவாதிக்கப்படும் பாடங்களுக்குத் தீர்வுகாண 75 இற்கும் மேற்பட்ட நாடுகள் அமெரிக்கப் பிரதிநிதிகளை அழைத்துள்ளன. மேலும், இந்த நாடுகள் எனது வலுவான ஆலோசனையின் பேரில், அமெரிக்காவுக்கு எதிராக எந்த வகையிலும், வடிவத்திலும் பழிவாங்கவில்லை என்பதன் அடிப்படையில், 90 நாட்கள் வரி இடைநிறுத்தத்தை நான் அங்கீகரித்துள்ளேன்.

மேலும், இந்தக் காலகட்டத்தில் கணிசமாகக் குறைக்கப்பட்ட 10 சதவீத பரஸ்பர கட்டணமும் உடனடியாக அமுலுக்கு வருகிறது. இந்த விடயத்தில் உங்கள் கவனத்துக்கு நன்றி என்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (எ)

# விஜய் மல்லையா வழக்கில் இந்திய வங்கிகள் வெற்றி

லண்டன், ஏப்.11

விஜய் மல்லையாவுக்கு எதிரான வழக்கில் இந்திய வங்கிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இந்தியாவில் உள்ள 17இற்கும் மேற்பட்ட வங்கிகளில் இலங்கை மதிப்பில் 30000 கோடி ரூபாய்க்கு மேலாக தொழிலதிபரான விஜய் மல்லையா கடன் வாங்கியிருந்தார். கடனைத் திருப்பி செலுத்தாத அவர், கடந்த 2016 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு தப்பிச் சென்றார். தற்போது, லண்டனில் வசித்துவரும் அவரை, நாடு கடத்தும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

விஜய் மல்லையா, கிங்பிஷர் ஏர்லைன்ஸூக்கு அளித்த உத்தரவாதம் தொடர்பில் கடன் மீட்பு தீர்ப்பாயம் உத்தரவிட்டிருந்தது. கடந்த 2017ஆம் ஆண்டு, அந்தத் தீர்ப்பை லண்டன் நீதிமன்றில் இந்திய வங்கிகள் தாக்கல் செய்தன.

அத்துடன், 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், விஜய் மல்லையாவுக்கு எதிராக வங்கிகள் மனு தாக்கல் செய்தன.



இந்த நிலையில், லண்டன் நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்திய வங்கிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது. விஜய் மல்லையா திவாலானவர் (கடன் கொடுத்தவர்களுக்கு அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க இயலாதவர்) என்ற உத்தரவை நீதிமன்றம் உறுதி செய்தது. மேல்முறையீடு செய்ய அனுமதி கோரிய விஜய் மல்லையாவின் 2 மனுக்களையும் நீதிமன்றம் நிராகரித்தது. (எ)

# அமெரிக்காவில் மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு

விர்ஜீனியா, ஏப்.11

அமெரிக்காவில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலியாகினர். 3 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் அமைந்த விர்ஜீனியா மாகாணத்தில் ஸ்பாட்சில்வேனியா பகுதியில் டவுன்ஹவுஸ் வளாகத்தில் நேற்று அதிகாலை மர்ம நபர்கள் சிலர் ஆயுதங்களுடன் வந்தனர். அவர்கள் மக்களை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர். இந்த பகுதி வாஷிங்டன் நகரிலிருந்து தென்மேற்கே 105 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து சம்பவம் நடந்த பகுதியை தவிர்க்கும்படி பொது மக்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னணியில் யார் உள்ளனர் என்ற விவரம் உடனடியாக வெளியிடப்படவில்லை. யாரும் கைது செய்யப்படவில்லை. தாக்குதலை நடத்தியதற்கான காரணமும் தெரிய வரவில்லை.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவரும் துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (எ)

# இன்ஸ்டாகிராம் பயன்படுத்த சிறுவர்களுக்கு கட்டுப்பாடு

லண்டன், ஏப். 11

இன்ஸ்டாகிராம் பயன்படுத்த சிறுவர்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

உலகின் முன்னணி சமூக வலைத்தள நிறுவனமாக "மெட்டா" உள்ளது. இந்த நிறுவனத்தின் சமூக வலைத்தள செயலிகளான பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றை உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் பேஸ்புக் மெசஞ்சர், இன்ஸ்டாகிராம் பயன்படுத்துவதற்கு புதிய கட்டுப்பாட்டை மெட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி பெற்றோர்கள் தங்களின் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் கணக்குகளை நேரடியாக மேற்பார்வையிட கூடுதல் வசதிகளை அளித்துள்ளது. இதன்மூலம், பெற்றோர் அனுமதியில்லாமல் சிறுவர்கள் இன்ஸ்டாகிராமில் நேரலையில் தோன்றுதல், நிர்வாணப் படங்களை பரிமாறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் தங்களுடைய கணக்குகளுடன் குழந்தைகளின் கணக்குகளை இணைத்து இதனைச் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இந்த கட்டுப்பாடு அமுலுக்கு வருகிறது. (எ)

# தாய்வானில் நிலநடுக்கம்

தைபே சிற்றி, ஏப். 11

தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன.

நேற்று முன்தினம் காலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நாட்டின் வடகிழக்கு கடற்கரை நகரான இலன் நகரை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இலன் நகரிலிருந்து 21 கிலோ மீற்றர் தொலைவில் 69 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 5. 8 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் சில விநாடிகள் அதிர்ந்தன. இதனால், பொது மக்கள் அச்சமடைந்தனர். ஆனாலும், இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் ஏற்படவில்லை. அண்மையில் மியன்மாரில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊழலில் கர்நாடகா முதலிடம்!

பெங்களூரு, ஏப். 11

ஊழலில் கர்நாடகா முதலிடம் என்று முதலமைச்சரின் ஆலோசகர் கருத்து வெளியிட்டுள்ளதால் அந்த மாநில அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் கர்நாடக மாநிலம் கொப்பலில் மாகாணங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வை தீர்ப்பது தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவின் பொருளாதார ஆலோசகர் பசவராஜ் ராயரெட்டி கூறுகையில், கர்நாடகாவில் யார் முதல்வராக இருந்தாலும், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் ஊழல் அதிகமாக நடைபெறுகிறது. ஊழலில் எப்போதும் கர்நாடகா முதலிடத்தில் இருக்கிறது.

அரசின் அனைத்துத் துறைகளிலும் ஊழல் நிறைந்திருப்பதால் தரமான வளர்ச்சி பணிகள் நடைபெறுவதில்லை. சுதந்திரத்துக்கு முன்பு கட்டிய அரசு கட்டடங்கள் இப்போதும் கம்பீரமாக நிற்கின்றன. தற்போது கட்டப்படும் கட்டடங்கள் 10 ஆண்டுகளில் இடிந்து விழுகின்றன- என்றார்.

பசவராஜ் கருத்தை சுட்டிக்காட்டி பா.ஜ.க., ம.ஜ.த. ஆகிய எதிர்க்கட்சியினர் காங்கிரஸ் அரசை விமர்சித்து வருகின்றன. (எ)

# முதியோர் இல்லத்தில் பயங்கர தீ விபத்து!

## 20 பேர் உடல் கருகி பலி

பீஜிங், ஏப். 11

வடக்கு சீனாவின் ஹெபே மாகாணத்தில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து குறித்து தீயணைப்புத் துறையினருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, 20 பேரின் உடல்கள் கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டன. மேலும், பலர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரிய வரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானை வீழ்த்தி குஜராத் அணி வெற்றி

அகமதாபாத், ஏப்.11

ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது.

10 அணிகள் பங்கேற்றுள்ள 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 23ஆவது ஆட்டத்தில் குஜராத் ரைற்றன்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 217 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க வீரராக களமிறங்கிய சாய் சுதர்சன் அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்தார். இதேவேளை, ஜோஸ் பட்லர், ஷாருக்கான் இருவரும் சிறப்பாக விளையாடி தலா 36 ஓட்டங்கள் எடுத்தனர்.

53 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்த சாய் சுதர்சன் 18 ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். ராஜஸ்தான் அணி சார்பில் மகீஷ் தீக்சனா, துஷார் தேஷ்பாண்டே இருவரும் தலா 2 விக்கெட்களும், ஜோப்ரா ஆர்ச்சர், சந்தீப் சர்மா இருவரும் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து 218 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் சார்பில் ஜெய்ஸ்வால் மற்றும் சஞ்சு சாம்சன் ஆகியோர் களமிறங்கினர். இந்த ஜோடியில் ஜெய்ஸ்வால் 6 ஓட்டங்களில் வெளியேற, அடுத்து களமிறங்கிய நிதிஷ் ராணா ஓர் ஓட்டத்தில் வெளியேறினார்.

அடுத்ததாக சஞ்சு சாம்சனுடன், ரியான் பராக் ஜோடி சேர்ந்தார். அதிரடியாக ஓட்டங்கள் குவிக்கத் தொடங்கிய ரியான் பராக் 26 (14) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சஞ்சு சாம்சன் 41 ஓட்டங்களில் வெளியேறினார்.


அடுத்ததாக ஹெட்மயருடன், ஜோப்ரா ஆர்ச்சர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியில் அதிரடி காட்டிய ஹெட்மயர் 29 பந்துகளில் தனது அரைச்சதத்தை பதிவு



செய்து அசத்தினார்.

இறுதியில் ராஜஸ்தான் அணி 19. 2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 159 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. குஜராத் அணியின் சார்பில் அதிகபட்சமாக பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்களும், சாய் கிஷோர் மற்றும் ரஷித்கான் ஆகியோர் தலா 2 விக்கெட்களும், கெஜ்ரோலியா, சிராஜ் மற்றும் அர்ஷத் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதன்மூலம் ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது. (எ)



# மக்ஸ்வெல்லுக்கு அபராதம் விதிப்பு

முல்லன்பூர், ஏப்.11

மைதானத்தில் இருந்த உபகரணங்களை சேதப்படுத்தியதற்காக மக்ஸ்வெல்லுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் தொடரில் முல்லன்பூரில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற 22ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 219 ஓட்டங்கள் குவித்தது.

சென்னை 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 201 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் வெற்றி பெற்றது. இந்தப்போட்டியில் நடத்தை விதிமுறைகளை மீறியதற்காக பஞ்சாப் அணியின் சகல துறை வீரர் மக்ஸ்வெல்லுக்கு போட்டி கட்டணத்தில் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவருக்கு ஒரு தகுதி இழப்பு புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது. போட்டியின் போது மைதானத்தில் இருந்த உபகரணங்களை சேதப்படுத்தியதற்காக மக்ஸ்வெல்லுக்கு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# பி. வி. சிந்து வெற்றி

நிங்போ, ஏப். 11

ஆசிய பட்மிண்டன் சம்பியன்ஷிப் முதல் சுற்றில் இந்தியாவின் பி. வி. சிந்து வெற்றி பெற்றுள்ளார்.

ஆசிய பட்மிண்டன் சம்பியன்ஷிப் போட்டி சீனாவின் நிங்போ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில், நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து, இந்தோனேசிய வீராங்கனையின் எஸ்தெர் நுருமியுடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பி. வி. சிந்து 21-15, 21-19 என்ற நேர்செட்டில் எஸ்தெர் நுருமியை வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் லக்சயா சென், சீன வீரர் சியா ஹாவ் லீயுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் லக்சயா சென் 18-21, 10-21 என்ற நேர்செட்டில் சியா ஹாவ் லீயிடம் தோல்வியடைந்தார். மற்றொரு இந்திய வீரர் எச்.எஸ்.பிரனாய் 16-21, 21-12, 11-21 என்ற செட் கணக்கில் சீனாவின் சூ குயாங் லூவிடம் தோல்வியடைந்தார். (எ)



# ஷர்துல் தாக்கூர் மோசமான சாதனை

கொல்கத்தா, ஏப். 11

ஐ. பி. எல். தொடரில் ஷர்துல் தாக்கூர் மோசமான சாதனை படைத்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற 21ஆவது லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.

இந்த நிலையில், கொல்கத்தா அணி துடுப்பாட்டம் செய்தபோது 13ஆவது ஓவரை ஷர்துல் தாக்கூர் வீசினார். அந்த ஓவரில் தாக்கூர் தொடர்ச்சியாக 5 அகல பந்துகளை வீசினார். ஐ.பி.எல். வரலாற்றில் ஒரு பந்து வீச்சாளர் தொடர்ச்சியாக 5 அகல பந்துகளை வீசியது இதுவே முதல் முறையாகும்.

மொத்தத்தில் லக்னோ பந்து வீச்சாளர்கள் அகல பந்துகள் மூலம் 20 ஓட்டங்கள் வழங்கினர். இதில் ஷர்துல் தாக்கூர் மட்டும் 8 அகல பந்துகளை வீசினார். இதன் மூலம் ஒரு இன்னிங்ஸில் அதிக அகல பந்துகளை வீசிய பந்து வீச்சாளர் என்ற மோசமான சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார் ஷர்துல் தாக்கூர். (எ)



# "அணிக்கு இன்னும் அதிகம் பங்களிக்க நினைக்கிறேன்"

முல்லன்பூர், ஏப். 11

பங்சாப் அணிக்கு இன்னும் அதிகமாக பங்களிக்க நினைக்கிறேன் என்று பிரியன்ஷ் ஆர்யா தெரிவித்தார்.

ஐ. பி. எல் தொடரில் முல்லன்பூரில் கடந்த 8 ஆம் திகதி இரவு நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் பஞ்சாப் தரப்பில் அதிரடியாக விளையாடிய பிரியன்ஷ் ஆர்யா 103 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகன் விருது பிரியன்ஷ் ஆர்யாவுக்கு வழங்கப்பட்டது..இதையடுத்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, உலகிற்கு வெளியே இருப்பது போல் உணர்கிறேன். மிகவும் மகிழ்ச்சி. அதே சமயம் இன்னும் என்னுடைய அணிக்காக வெற்றியில் அதிகம் பங்காற்ற விரும்புகிறேன். இது தான் என்னுடைய துடுப்பாட்ட வழியாகும்.

அதிரடியாக விளையாடும் நோக்கத்துடன் இருக்குமாறு ஸ்ரேயஸ் சொன்னார். இதன் காரணமாக எனது மனதில் இருப்பதற்கு தகுந்தார் போல் விளையாட விரும்பினேன். அதே சமயம் சூழ்நிலைக்கு தகுந்தார் போலும் விளையாட விரும்பினேன்- என்றார். (எ)



# "என்ன தேவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்"

கொல்கத்தா, ஏப்.11



கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் நிக்கோலஸ் பூரன் 36 பந்துகளில் 87 ஓட்டங்கள் எடுத்தார். இந்த நிலையில், தான் அதிரடியாக விளையாட காரணம் என்ன என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் கொல்கத்தாவில் நடைபெற்ற 21ஆவது லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ திரில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகன் விருது நிக்கோலஸ் பூரனுக்கு வழங்கப்பட்டது. இதன்போது, "நீங்கள் எப்படி எளிதாக சிக்ஸர்கள் அடித்து அதிரடியாக விளையாடுகிறீர்கள்" என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த பூரன் "இந்தக் கேள்வி என்னிடம் இலட்சம் முறை கேட்கப்பட்டு விட்டது. இதற்காக நான் நிறைய பயிற்சி செய்கிறேன். அதையும் தாண்டி நிறைய சமயங்களில் அனைத்தும் எனக்கு இயற்கையாகவே வருகிறது. போட்டியில் என்ன தேவை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பந்துவீச்சாளர்கள் எப்படி பந்து வீச போகிறார்கள் என்பதை அறிந்து அதற்குத் தகுந்தார் போல் நீங்கள் செயல்பட வேண்டும்.

ஆட்டத்தை நன்றாக தொடங்கி அதைப் பயன்படுத்தி தொடர்ந்து அசத்துவதே எனது நோக்கம். தொடர்ச்சியாக வரும் வாய்ப்புகளில் நான் தொடர்ந்து மகிழ்ச்சியாக ஓட்டங்கள் குவிக்க விரும்புகிறேன்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டலந்த போன்...

எடுக்கப்பட்டிருந்தால் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நடந்த பல குற்றச் செயல்களை தடுத்திருக்கலாம். இந்த நாட்டில் இனியொருபோதும் இந் நிலைமை தோற்றம் பெறாமலிருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், எமது நாட்டில் இடம்பெற்ற பாரதூரமான கொலைகள் தொடர்பான குற்றங்கள், நீதித்துறைக்கு விரோதமான கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப் பட்டவை போன்ற பல விடயங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கை 35 ஆண்டுகளுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல அறிக்கைகள் வடக்கு மற்றும் கிழக்கில் நிலவிய யுத்த காலத்தின்போதும் மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சி காலத்தின் போதும், நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான யுத்தக் குற்றங்கள் போன்ற பல விடயங்களை கொண்ட பல்வேறு அறிக்கைகள், பட்டலந்த அறிக்கையை போன்று பல வருடங்களாக ஆராயப்படாமல் களஞ்சியங்களில் இருக்கின்றன.

இவ்வாறான அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்து அவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு அதனை அப்படியே கைவிட்ட வரலாறுகள் உள்ளன. அதனால் இந்த அறிக்கையை விவாதிப்பது மட்டுமன்றி அறிக்கையில் குற்றவாளிகளாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிரான முறையான விசாரணைகளை நடத்த வேண்டும்.

அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். இந்த பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான குற்றங்கள் மீள ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிப்பகுதியில் இதேபோன்று மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், நீதிக்கு புறம்பான கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல், உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள் வீடு திரும்பாமை,போர்க் குற்றங்கள் போன்றவை பல அறிக்கைகளில் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால் அந்த அறிக்கைகளை எடுத்து நடவடிக்கை எடுக்கும் போது நாட்டுக்காக போராடியவர்களை காட்டிக்கொடுப்பதாக இங்குள்ள அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

எத்தனை அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருகின்றோம் என்பதில் பிரச்னையில்லை. ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாக இருந்திருந்தால், யுத்தத்தின் இறுதிப்பகுதியில் போர்க்குற்றங்களை செய்தவர்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்தோர். பயத்திலேயே அதை செய்திருக்கமாட்டார்கள்.

எவ்வாறாயினும் அறிக்கைகளில் உள்ள முடிவுரைகளுக்கமைய சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதன் ஊடாக நாட்டில் இவ்வாறான குற்றங்கள் மீள நடக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு உள்ளது.

நாங்கள் அரசியல் காரணங்களுக்காக மட்டும் இந்த அறிக்கைகளை புரட்டாமல், இந்த நாடு ஒரு அமைதியான எல்லா மக்களும் வாழக் கூடிய நாடாக மாற வேண்டுமாக இருந்தால் இந்த ஆணைக்குழு அறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கமாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (அ)

## அச்சுவேலி...

சுமார் 30 வருட காலத்துக்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி மற்றும் அதனுள் இருந்த கட்டடம் என்பவற்றை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரிடம் இராணுவத்தினர் நேற்று உத்தியோகபூர்வமாக கையளித்த நிலையில், பிரதேச செயலரினால் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டது. இதுவரை காலமும் மாற்றிடம் ஒன்றில் தலைமை காரியாலயம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வயாவிளான் - பலாலி வீதி விடுவிக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து, இதுவரை வயாவிளான் வரையில் சேவையில் ஈடுபட்ட 764ஆம் இலக்க தனியார் பேருந்து சேவை, இனி காங்கேசன்துறை வரை பயணிக்கும் என தனியார் பேருந்து சேவையினர் தெரிவித்துள்ளனர். (அ)

## பட்டலந்த சித்திர...

தண்டனை பெற்றுக்கொடுப்போமென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பட்டலந்த விவகாரத்துக்கு நீண்ட வரலாறு உள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார குமாரதுங்க 1948 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க விசாரணை சட்டத்தின் பிரகாரம் பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வற்கு விசேட ஆணைக்குழுவை நியமித்தார்.

1988 முதல் 1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பட்டலந்த வீட்டுத்தொகுதியில் இடம்பெற்ற சித்திரவதை முகாம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப் பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் பல்வேறு சித்திரவதை முகாம்களில் பல சட்டத்தரணிகளும், தொழிற்சங்கவாதிகளும், அரசியல் நண்பர்களும் கொலை செய்யப்பட்டார்கள். அரசியல் செய்த காரணத்துக்காக எமது சகாக்கள் பலர் கொல்லப்பட்டார்கள்.

சித்திரவதை முகாம்களில் கொல்லப் பட்டவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். பட்டலந்த சித்திரவதை முகாமிற்கும், அப்போதைய கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு என்பதற்கு பல பரிந்துரைகள் ஆணைக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அப்போதைய கால கட்டத்தில் கைத்தொழில் மற்றும் விஞ்ஞான அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க வன்முறையான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸூக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பொலிஸூக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கவில்லை என்றும், அவர் தனது அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியுள்ளார் என்று பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பட்டலந்த சித்திரவதை முகாமுக்கும், படுகொலைகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்புண்டு. ஆகவே அவர் பொறுப்புக்கூறவேண்டும். வெண்மைநிற ஆடையணிந்துக் கொண்டு மனித படுகொலையாளியாகவே இவர் செயற்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்வுக்கும், கோனமுல்ல சுனிலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ரணில் விக்கிரமசிங்கவின் தூண்டுதலினால் தான் வன்முறைகள் இடம்பெற்றன. இந்த குற்றங்களுக்கு ரணில் விக்கிரமசிங்க நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும்-என்றார். (அ)

## மேய்ச்சல்தரை...

வளர்பாளர்களுக்கும் மேய்ச்சல் தரை தேவை காணப்படுகின்றது. அதற்காக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வனப் பிரதேசத்தில் மேய்சலில் ஈடுபடுத்துவதற்கும் நாம் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளோம். இதற்கு சாதகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

எனவே, கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் எதிர்காலத்தில் எமது அரசாங்கம் சிறந்த தீர்வைத் தரும். வன்னி வாழ் மக்களே நீங்கள் தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்துவதன் மூலம் உங்களுக்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்-என்றார். (அ)

## பலாலி -

எனினும், வீதியினூடாக நடந்தும், சைக்கிளிலும் பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் வாகனங்களினூடான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த வீதியானது பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இராணுவக் குடியிருப்பினூடாக செல்லும் வீதி என்பதோடு, நேற்றுக் காலை முதல் திறக்கப் பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தினரால் பலத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி குறித்த வீதி காலை 06:00 மணிமுதல் மாலை 05:00 மணிவரை மாத்திரமே மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படும். குறித்த வீதியினால் பயணிப்பவர்கள் வீதியின் இடையில் நிறுத்துதல், வாகனங்களைத் திருப்புதல், பயண நேரத்தில் புகைப்படம், காணொலி எடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நடை பயணம் மற்றும் பஸ் தவிர்ந்த பாரவூர்திகள் குறித்த வீதியூடாகச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் மாத்திரமே செல்ல முடிவதுடன் சாரதிகளுக்கான அடையாள ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டியது கட்டாயமாகும்.

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை மீறுவது சட்டரீதியான குற்றமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பட்டலந்த வதை...

எனவும் ஜூலை கலவரத்தை அடிப்படையாகக் கொண்டே தமது கட்சி மீது தடை விதிக்கப்பட்டது என்றும், அன்று ஏற்பட்ட கறுப்பு ஜூலையென்பது இன்றளவிலும் கறுப்பு புள்ளியாகவே இருந்து வருகின்றது எனவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன் குறித்த தடையை நீக்குமாறு ஜனாதிபதி முதல் பலரிடம் தாம் கோரிக்கை விடுத்தபோதும் எந்த பலனும் கிட்டவில்லை எனவும், இதற்கிடையில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு தமது உறுப்பினர்களை ஆட்சியில் இருந்தவர்கள் கொன்றொழித்துள்ளனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டை நாசமாக்குகின்ற ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட வேளை, நாடு காட்டிக்கொடுக்கப்பட்ட வேளையில்தான் அதற்கு எதிராக 1987 மற்றும் 1989 களில் எம்மவர்கள் வீறு கொண்டெழுந்தனர் எனவும்,அவர்கள் கொன்று புதைக்கப்பட்டனர் எனவும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு மற்றும் மலையக மக்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும், அவர்களும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கும் நீதி கிடைக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## சர்வதேச...

சிறு ஆயுதங்கள் ஏனும் நாங்கள் கையில் எடுக்கவில்லை. 1994ஆம் ஆண்டுக்கு பின்னர் தேர்தலில் போட்டியிட்ட எமது 8 சகோதரர்களை கொலை செய்தனர். எனினும் நாங்கள் உண்டி வில்லையேனும் கையில் எடுக்கவில்லை. பயத்தினால் அல்ல. ஆயுதத்தில் உள்ள பலம் தொடர்பில் எங்களுக்கு நன்கு தெரியும். அதனை கையில் எடுத்தால் மீண்டும் கீழே வைக்க முடியாது. அது கிட்டாரில்லை. பிரதான கொலையாளி களுக்கு கட்டாயம் நீதி மன்றம் ஊடாக தண்டனை வழங்குவோம்.

வெளிநாடுகளில் உள்ள சிறந்த அதிகாரிகளையேனும் கொண்டு வந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சட்ட ரீதியான அனைத்து விசாரணைகளையும் மேற்கொண்டு அவர்களின் இறுதி காலத்தில் ஏனும் கட்டாயம் நாங்கள் தண்டனையை வழங்க நடவடிக்கை எடுப்போம். அடுத்த விவாத நாளுக்கு முன்னர் இது தொடர்பான விசாரணை குழுவை ஜனாதிபதி நியமிப்பார்.

எமது மகன் வருவான் என தினமும் இரவு இரவாக கதவை திறந்து வைத்து காத்திருந்த வடக்கு, கிழக்கு, தெற்கில் வாழ்ந்த அனைத்து அம்மாக்களுக்கு நாம் நீதியை பெற்று கொடுப்போம்-என்றார். (அ)

## சர்வகட்சி...

முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, ஜனாதிபதி இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் புதிய வரி கொள்கையை எதிர்கொள்வதில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட குழுவால் முன்வைக் கப்பட்ட பிரச்சினைகள் குறித்தும், இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி கட்சித் தலைவர்களுக்கு விளக்கினார்.

சம்பந்தப்பட்ட குழுவால் முன்வைக்கப் பட்ட பிரச்னைகள் மற்றும் இது தொடர்பாக எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளால் முன்வைக் கப்பட்ட முன்மொழிவுகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்துடனான பேச்சுகளுக்கான திட்டங்களை தயாரிப்பது மற்றும் ஏற்றுமதி இலக்குகளை பல்வகைப்படுத்துவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப் பட்ட முன்மொழிவுகள் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் குறித்து கட்சித் தலைவர்களுடன் எதிர் காலத்தில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஹர்ஷ டி சில்வா, தமிழ் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சாணக்கியன் இராசமாணிக்கம், புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் ரவி கருணாநாயக்க, சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பாக டீ.வி.சானக்கவும், தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி மனோ கணேசன், பழனி திகாம்பரம் ஆகியோர் இங்கு தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

மேலும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் ரிஷாத் பதியுதீன், சர்வஜன அதிகாரம் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் திலித் ஜயவீர, ஐக்கிய தேசிய கட்சி சார்பாக ஜீவன் தொண்டமான், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் தயாசிறி ஜயசேகர, அர்ச்சுனா இராமநாதன் ஆகியோரும் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர். இந்நிகழ்வில் கயந்த கருணாதிலக, காவிந்த ஜயவர்தன, எஸ். எம். மரிக்கார், காதர் மஸ்தான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நவக்கிரி சித்த வைத்தியசாலைக்கு சொந்தமான காணியும் விடுவிப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 11

அச்சுவேலி நவக்கிரி சித்த மருத்துவமனைக்கு சொந்தமான 02 ஏக்கர் காணியை இராணுவத்தினர் மீளக் கையளித்துள்ளனர்.

நவக்கிரி சித்த மருத்துவமனைக்குச் சொந்தமான 02 ஏக்கர் காணியையும் கடந்த 1996ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் கையகப்படுத்தி நிலை கொண்டிருந்தனர்.

அந்நிலையில் நேற்று வியாழக்கிழமை குறித்த காணியை மீள கையளித்துள்ளனர்.

சித்த மருத்துவமனைக்கு தேவையான மூலிகைகளை பயிரிடும் காணியாக குறித்த காணி காணப்பட்ட நிலையில் 1996ஆம் ஆண்டு இராணுவத்தினர் காணியை கையகப்படுத்தி கடந்த 30 ஆண்டு காலமாக நிலை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் வவுனியாவில் 6 முறைப்பாடுகள்

வவுனியா, ஏப்.11

தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் இதுவரை 4 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சி. அமல்ராஜ் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வவுனியாவில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எந்தவித குழப்பங்களும் இன்றி அமைதியான முறையில் தேர்தல் செயல்பாடுகள் நடைபெறுகின்றன.

இதுவரைக்கும் 6 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆறும் தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பானது. வன்முறை தொடர்பில் எவையும் பதிவாகவில்லை. அதில் 4 முறைப்பாடுகள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. இரு முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன- என்றார். (எ- 10)

## புத்தாண்டுக்கான பலகார உற்பத்தி செலவு அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 11

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கான பலகாரம், இனிப்பு தின்பண்டங்களின் உற்பத்தி செலவு 7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது 2019ஆம் ஆண்டைவிட இரண்டு மடங்கு அதிகமாகும் என்று வெரிட்டே ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதங்களுக்கு இடையில், பலகாரம், இனிப்பு தின்பண்டங்களுக்கான மூலப்பொருட்களின் விலையில் 7 சதவீத அதிகரிப்பு இருப்பதாகப் பகுப்பாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இதற்கான முக்கிய காரணமாகும். 2024 ஆம் ஆண்டில், தின்பண்டங்களுக்கான மூலப்பொருட்களின் விலை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2.2 மடங்கு அதிகரித்துள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டில், இது 2019ஆம் ஆண்டிலிருந்த விலையைவிட 2.4 மடங்கு அதிகரித்துள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தல் வேளைதான் வீதியை திறப்பீர்களா?

## கேள்வி எழுப்புகிறார் சுமந்திரன்

கொழும்பு, ஏப். 11

**தேர்தல் நெருங்கும்வேளைதான் வீதியை திறப்பீர்களா என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் எம். ஏ. சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**



யாழ். பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தனது சமூக ஊடக பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு வினா தொடுத்துள்ளார்.

"கட்டுப்பாடுகளுடன் பலாலி வீதி திறக்கப்பட்டதை வரவேற்கின்றோம். ஆனால் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித் தவர்கள் கட்டுப்பாடுகளை விதிக்க முடியுமா?" எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக சட்டபூர்வமாக வர்த்தமா னியில் அறிவிக்கப்பட்ட பகுதியில்லை. மாலை 6 மணியிலிருந்து காலை 5 மணிவரை போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்கு எந்த சட்டம் உங்களுக்கு அனுமதி வழங்கியது.

ஏன் பாதசாரிகள் இந்த வீதியை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவில்லை." எனவும் சுமந்திரன் கேட்டுள்ளார். (அ)

## தேசபந்துவுக்கு பிணை!

கொழும்பு, ஏப். 11


விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணை வழங்கி மாத்தறை நீதிவான் விடுவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று மீண்டும் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோன், 20 நாட்கள் கடந்து மார்ச் 19ஆம் திகதி மாத்தறை நீதிமன்றத்தில் சரணடைந்து நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் சர்வதேசக் கிரிக்கெட் அரங்கம் விளையாட்டு அமைச்சர் நேரில் பார்வை







யாழ்ப்பாணம், ஏப் 11

வடக்கு மாகாணத்தில் ஒரு சர்வதேச கிரிக்கெட் அரங்கத்தை நிறுவுவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜயசூரிய மற்றும் விளையாட்டு அமைச்சர் சுனில் கமகே நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்காக முன்மொழியப்பட்டுள்ள- மண்டைதீவில் அமைந்துள்ள காணியை இந்த குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்த பயணத்தில் யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகள் தளபதி மேஜர் ஜெனரல் காகன யஹமபத்தும் கலந்து கொண்டார்.

இதன்போது, அதிகாரிகள் இருப்பிடத்தின் சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்ததுடன், வடக்கு பிராந்தியத்தில் கிரிக்கெட்டை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட வசதியை மேம்படுத்துவதற்கான ஆரம்ப திட்டங்களைப் பற்றி விவாதித்தனர்.

தற்போது தேசிய அணியின் தலைமைப் பயிற்சியாளராகவும், இலங்கை கிரிக்கெட் உயர் செயல்திறன் மையத்தின் இயக்குநராகவும் பணியாற்றும் சனத் ஜயசூரிய, அரங்கத்தை நிர்மாணிப்பதற்கான நிதி உதவிக்காக இந்திய பிரதமரிடம் கடந்த வாரம் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

"இந்த முயற்சி வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும். கிரிக்கெட் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று விளையாட்டு அமைச்சர் சுனில் கமகே தெரிவித்தார்.

"இந்த திட்டத்துடன் நாங்கள் முன்னேறுவோம், இப்போது நாங்கள் இறுதி செய்ய வேண்டியது அவசியம். கடந்த மாதம் இந்திய உயர் ஸ்தானிகருக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன், சனத் கடந்த வாரம் இந்திய பிரதமருக்கு ஒரு கோரிக்கையை முன்வைத்தார். இலங்கை கிரிக்கெட்டும் இந்த திட்டத்தை ஆதரிக்கும்" என்று அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# போராட்டம் செய்தோம் என்பதற்காக இன்னமும் பகையுடன் இருக்கலாமா?

**ரில்வின் சில்வா கேள்வி**

கொழும்பு, ஏப். 11

நாட்டை பாதுகாப்பதற்காக நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம். ஆனால் தற்போது இந்தியா மாத்திரம் அல்ல முழு உலகமும் மாறி விட்டது. போராட்டம் செய்தோம் என்பதற்காக இன்னமும் பகையுடன் இருக்க வேண்டுமா? நாம் நாட்டை கட்டிக்கொடுக்கவில்லை. நாம் இந்தியாவுடன் நாட்டை காட்டிகொடுக்கும் உடன்படிக்கை செய்துள்ளதாக கூறுபவர்கள் அதனை வெளிப்படுத்த வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்களால் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பயனடைகின்றன. இலங்கையின் வரலாற்றில் அதிக சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்ற அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இடம்பிடித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு இலங்கையின் வான் பரப்பை இந்தியா கைப்பற்றியது. இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வருகை தந்து எம்மை அச்சுறுத்தினர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

அது நாட்டை கட்டிக்கொடுக்கும் வேலை என்பதால் நாம் அதற்கு போராடினோம். தற்போது இந்தியா மாறியுள்ளது. உலக நாடுகளும் மாறியுள்ளன. 1990ஆம் ஆண்டுகளில் போராட்டங்களில் ஈடுபட்டோம் என்பதற்காக பகையுடன் இருக்க வேண்டுமா? அந்த சந்தர்ப்பத்தில் பிரச்னை ஏற்பட்டது. போராட்டம் நடத்தினோம்.

ஆனால், அந்த பிரச்னை இப்போது இல்லை. அன்று எமக்கு சர்வதேசத்துடன் தொடர்பில்லை. சர்வதேசத்துடன் நாம் பொருந்தவில்லை என்றனர். தற்போது நாட்டை காட்டிக் கொடுப்பதாக கூறுகின்றனர் -என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org